www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 8 YouTube/ Akwa Academy தேர்வு எண் * * 1 0 5 1

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

நேரம் : 2.30 மணி| **அறிவியல்** |மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10x1=10**

1. வெப்பநிலையின் SI அலகு --------
   அ) செல்சியஸ் ஆ) ஃபாரன்ஹீட் இ) கெல்வின் ஈ) ஆம்பியர்
2. வாகனங்களில் பின் காட்சி ஆடியாகப் பயன்படுத்தப்படும் ஆடி
   அ) குழி ஆடி ஆ) குவி ஆடி இ) சமதள ஆடி ஈ) எதுவுமில்லை
3. மின் உருகி என்பது ஒரு
   அ) சாவி ஆ) குறைந்த மின்தடை கொண்ட ஒரு மின் கம்பி
   இ) அதிக மின்தடை கொண்ட ஒரு மின் கம்பி
   ஈ) மின்சுற்றை தடைசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பாதுகாப்புக் கருவி
4. மின்சாரத்தைக் கடத்தும் அலோகம்
   அ) கார்பன் ஆ) ஆக்ஸிஜன் இ) அலுமினியம் ஈ) சல்ஃபர்
5. காற்றேற்றம் செய்யப்பட்ட நீரில் --------- உள்ளது.
   அ) காற்று ஆ) ஆக்ஸிஜன் இ) கார்பன் டை ஆக்ஸைடு ஈ) நைட்ரஜன்
6. எந்த வெப்பநிலையில் நீர் பனிக்கட்டியாக மாற்றமடையும்?
   அ) $0^oC$ ஆ) $100^oC$ இ) $102^oC$ ஈ) $98^oC$
7. மனிதருக்கு சாதாரண சளியை உண்டாக்கும் நுண்ணுயிரி --------- என அழைக்கப்படுகிறது.
   அ) பிளாஸ்மோடியம் ஆ) இன்ஃபுளுயன்சா இ) விப்ரியோகாலரே ஈ) ஆப்தோவைரஸ்
8. இரு சொற்பெயரிடு முறை முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு -------
   அ) 1970 ஆ) 1975 இ) 1978 ஈ) 1623
9. ------- செல்கள் சிறப்பு வாய்ந்த செல்களாகும். இவை உடலின் எந்த ஒரு செல்லாகவும் மாற இயலும்.
   அ) நரம்பு ஆ) மூல இ) இதய ஈ) எலும்பு
10. ஆடம்ஸ் ஆப்பிள் என்பது இதன் வளர்ச்சியைக் குறிக்கிறது
    அ) தொண்டைக்குழி ஆ) தைராய்டு இ) குரல்வளை ஈ) பாரா தைராய்டு

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 10x1=10**

11. நீரியல் உயர்த்தி --------- விதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.
12. கலோரி மீட்டர் என்ற சாதனம் ---------- ஐ அளக்கப் பயன்படுகிறது.
13. அதிர்வுறும் கம்பியின் தடிமன் அதிகரித்தால், அதன் சுருதி --------
14. -------- தொழிற்சாலைகளில் யூரியா தயாரிப்பதில் அடிப்படைப் பொருளாக உள்ளது.
15. எதிர்மின்சுமை கொண்ட அயனி -------- எனப்படும்.
16. கால்சியம் ஆக்சைடின் வேதிவாய்ப்பாடு --------
17. அகார் – அகார் ---------- என்ற பாசியிலிருந்து பெறப்படுகிறது.
18. மிகப்பெரிய செல் ---------- இன் முட்டை ஆகும்.
19. இரண்டு எலும்புகள் சந்திக்கும் இடம் ---------- என அழைக்கப்படுகிறது.
20. தைராய்டு சுரப்பி தொடர்புடைய நோய்களைத் தடுப்பதற்கு -------- உதவுகிறது.

**III. சரியா அல்லது தவறா? தவறெனில் திருத்தி எழுதுக. 10x1=10**

21. திடப்பொருளில் வெப்பப் பரிமாற்றம் நடைபெறும் நிகழ்விற்கு வெப்பக்கடத்தல் என்று பெயர் .
22. நீர் மின்சாரத்தைக் கடத்தும்.
23. ஒரு கூலும் மின்னூட்டம் ஒரு நிமிடத்தில் பாயும் எனில், அது ஓர் ஆம்பியர் என அழைக்கப்படுகிறது.
24. கடல் நீரில் உப்புகள் கரைந்துள்ளதால் அதனை விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம்.
25. அமிலங்கள் கசப்புச் சுவை உடையவை.
26. ஒரு வேதிவினை என்பது தற்காலிக வினையாகும்.
27. சின்னம்மை ஒரு தொற்று நோயாகும்.
28. இரு சொல் பெயர் இரண்டுக்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டிருக்கும்.
29. மனிதன் ஒரு வெப்ப இரத்தப் பிராணி.
30. இதயத்தசை ஒரு இயக்கு தசை.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

IV. பொருத்துக. 10x1=10

31. பாதரசமானி – அதிர்வெண் 20,000 Hz க்கு மேல் உள்ள ஒலி
32. நிறப்பிரிகை – அதிர்வெண் 20 Hz க்கு கீழ் உள்ள ஒலி
33. மீயொலி – வானவில்
34. இன்ஃப்ராசோனிக்ஸ் – வளிமண்டல அழுத்தம்
35. கார்பன் டை ஆக்சைடு – 45 முதல் 50 வயது
36. நியூட்ரான் – கொழுப்பு மற்றும் பிற ஸ்டீராய்டுகள்
37. ஆனோடு கதிர்கள் – அமினோ அமிலம்
38. அமினோ அமிலம் – கோல்ட்ஸ்டீன்
39. கொழுப்பு அமிலம் – ஜேம்ஸ் சாட்விக்
40. மாதவிடைவு – தீயணைப்பான்

V. ஏதேனும் 15 வினாக்களுக்கு விடையளிக்கவும். 15x2=30

41. வெப்பநிலையை அளவிடப் பயன்படும் அலகுகளைக் கூறுக.
42. கூற்று : தோள்பைகளில் அகலமான பட்டைகள் அமைக்கப்படுகின்றன.
காரணம் : அகலமான பட்டைகள் நீண்ட நாள் உழைக்கும்
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
43. குழி ஆடி மற்றும் குவி ஆடிகளின் பயன்களுள் இரண்டினைத் தருக.
44. தன்வெப்ப ஏற்புத்திறன் – வரையறு.
45. புவித்தொடுப்பு என்றால் என்ன?
46. ஒரு ஒலி அலை 8 வினாடிகளில் 2000 மீ பயணிக்கிறது எனில் ஒலியின் வேகம் என்ன?
47. கீழ் நோக்கிய விசை : எடை:: திரவங்களால் தரப்படும் மேல்நோக்கிய விசை : ------
48. மரங்களை நடுவது எப்படி ஒலி மாசுபாட்டை குறைக்க உதவுகிறது.
49. உலோகங்கள் மற்றும் அலோகங்கள் வேறுபடுத்துக.
50. ஒரு வேதிவினையில் வினைவேக மாற்றியின் பங்கு என்ன?
51. உலக வெப்பமயமாதல் என்றால் என்ன?
52. கீழ்க்காணும் சமன்பாடுகளை சமன் செய்க.
அ) $Na + O_2 \rightarrow Na_2O$ ஆ) $Ca + N_2 \rightarrow Ca_3N_2$
53. அமிலங்களின் ஏதேனும் நான்கு இயற்பியல் பண்புகளை எழுதுக.
54. விணுபாலன் மற்றும் ப்ரியன் பள்ளியில் மதிய உணவினை எடுத்துக் கொள்கிறார்கள். விணுபாலன் எலுமிச்சை சோறும், பிரியன் தயிர்ச்சோறும் சாப்பிடுகிறார்கள். எலுமிச்சை சோறு மற்றும் தயிர்சோறு இரண்டும் என்ன தன்மை உடையவை? அந்த சுவைக்குக் காரணம் என்ன?
55. வடிவத்தின் அடிப்படையில் நான்கு வகையான பாக்டீரியாக்களின் பெயர்களை எழுதுக.
56. பூஞ்சைகளின் பொருளாதார முக்கியத்துவம் ஏதேனும் இரண்டினை எழுதுக.
57. வளர்சிதை மாற்றம் – வரையறு.
58. மனித உடலில் எலும்புக்கூட்டின் செயல்பாடுகள் யாவை?
59. பெண்களில், மாதவிடாய் சுழற்சியின் போது தூய்மையின் முக்கியத்துவம் பற்றிக் கூறுக.
60. கிளாமிடோமோனாஸ் படம் வரைந்து பாகம் குறிக்கவும்.

VI. ஏவையேனும் 6 வினாக்களுக்கு விரிவான விடையளி. 6x5=30

61. அடிப்படை அளவுகளை அவற்றின் அலகுகளுடன் பட்டியலிடுக.
62. ஒளி எதிரொளித்தல் என்றால் என்ன? ஒழுங்கான மற்றும் ஒழுங்கற்ற எதிரொளிப்புகளைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.
63. தொடர் மற்றும் பக்க இணைப்புச் சுற்றை விளக்குக.
64. அமில மழையின் விளைவுகள் யாவை? அதை எவ்வாறு தடுக்கலாம்?
65. பல்வேறு நிலைகளில் நீர் மாசுபடுதலை விளக்குக.
66. அமிலங்களின் பயன்கள் யாவை?
67. மருத்துவத் துறையில் நுண்ணுயிரிகள் எவ்வாறு பயன்படுகின்றன.
68. வேறுபடுத்துக: உட்சுவாசம் மற்றும் வெளிசுவாசம்
69. பல்வேறு வகையான தசைகளைப் பற்றி எழுதுக.
70. வளரிளம் பருவத்தில் ஆண்கள் மற்றும் பெண்களில் ஏற்படும் உடல்ரீதியான மாற்றங்கள் யாவை?



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com